திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்

MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Prayer of Lord Muruga in Thirumurugatrupadai

A. Mohana[1], Dr. R. Dhevanan[2]

Guest Lecturer[1], Assistant Professor[2], Department of Tamil, Periyar University, Salem, India

Manuscript ID : **MT127A0069**

Volume : **2**

Issue : **4**

Month : **December**

Year : **2022**

Received: 10.10.2022
Revised: 27.10.2022
Accepted: 11.11.2022
Published: 25.11.2022

Pages : 161-166

DOI: 10.5281/zenodo.7375181

ABSTRACT:

The purpose of this article is to explain the features of Lord Murugan as mentioned in the first available grammar book Tolkappiyam about the worship methods found since ancient times and then the worship methods sung in Thirumurugaatrupadai in the pathupaadal.

KEYWORDS:

Veriyattu, Saiyon, Valipadu, Velan

திருமுருகாற்றுப்படையில் முருக வழிபாடு

அ. மோகனா[1], முனைவர் ரா. தேவணன்[2]
கௌரவ விரிவுரையாளர்[1], உதவிப்பேராசிரியர்[2], தமிழ்த்துறை,
பெரியார் பல்கலைக்கழகம், சேலம், இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

பழங்காலம் முதல் காணப்படும் வழிபாட்டு முறைகளை முதலில் கிடைத்த இலக்கண நூலான தொல்காப்பியம் கூறியதையும் அதன் பின் பத்துப்பாட்டில் கடவுள் வாழ்த்தாக அமைந்துள்ள திருமுருகாற்றுப்படையில் பாடப்பட்டுள்ள வழிபாட்டு முறைகளையும் முருகனின் சிறப்புகளையும் விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கருச்சொற்கள்

வெறியாட்டு, சேயோன், வழிபாடு, வேலன்

முன்னுரை

உலகம் தோன்றி பரிணாம வளர்ச்சியில் மனிதன் தோன்றினான். மனிதன் தோன்றிய காலம் முதலே அவன் இயற்கை நிகழ்வுகளைக் கண்டு அஞ்சினான். தான் அஞ்சிய இயற்கையை அவன் கடவுளாக எண்ணினான். அச்சமே கடவுள் வழிபாட்டின் தொடக்கமாக இருந்தாலும் பின்னர் எந்த செயலையும் தொடங்கும் முன் கடவுளை வழிப்பட்டுத் தொடங்குவது வழக்கமாகியுள்ளது. இவ்வழக்கம் சங்ககாலம் முதல் தற்காலம் வரை தொடர்ந்தே வருகின்றது. சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகையில் கடவுள் வாழ்த்துப்பாடல்கள் உள்ளன. பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை கடவுள் வாழ்த்தாக உள்ளது. அவ்வாறு பத்துப்பாட்டின் முதல் நூலான முருகாற்றுப்படையில் முருகனை வழிபடுவதை விளக்கும்விதமாக இக்கட்டுரை அமைகின்றது.

தொல்காப்பியத்தில் தெய்வம் வழிபாடு

தொல்காப்பிய பொருளதிகார அகத்திணையில் நால்வகை நிலப்பகுப்பையும் அந்நிலத்திற்கான கருப்பொருளையும் குறிப்பிடும் பொழுது அவற்றில் முதலாவதாக தெய்வத்தைக் குறிப்பிடுகிறார்.

மாயோன் மேய காடுரை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்

மாயோன் காட்டிற்கு தெய்வம், குறிஞ்சி நிலத்திற்கு சேயோன் தெய்வமாகவும் மருதத்திற்கு இந்திரன் தெய்வமாகவும், வருணன் நெய்தல் நிலத் தெய்வமாகவும் கூறியுள்ளார். "காட்டிற்குத் தெய்வம் மாயோன் என்று பிற்காலத்தார் கருதினும் மாயோனாகிய கருநிறமுடைய அம்மையையே சிறப்பாகக் கொள்ள வேண்டும். மாயோள் மேய காடுறையுலகமும்" என்ற பாடமே சிறந்தது. காடுகிழாஅள் என்றது மது நாட்டுப்புறங்களிலும் காடுகளிலும் பெருவழக்காக வழிபடப்படுந் தெய்வம் சக்தியின் வேக வடிவமாகிய காளியே. பிற்காலத்தில் மரபொற்றமை பற்றி கோவலர் மாயோன் வழிபாட்டைக் கைகொண்டனர். மாயோளும் மாயோனும் உடன் பிறந்தார் என்னுங் கொள்கையுங் காண்க. மாயோனுக்கு மருமகனாகிய முருகன் வழிபாடு குறிஞ்சி நிலத்தில் சிறப்பாக நிகழந்தது. (க.சுப்ரமணியப்பிள்ளை, பழந்தமிழ் நாகரிகம், 2018) என்கிறார். குறிஞ்சிநிலக் கடவுள் முருகன் தொல்காப்பிய காலத்தில் இருந்தே வணங்கப்பட்டு வருகிறார்.

"வழிபடு தெய்வம் நிற்புறம் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலியின் என்னும் புறநிலை வாழ்த்தே" - (**தொல்**.1367)

என்றும் புறநிலைவாழ்த்து உனது குல தெய்வம் உன் குடும்பத்தை செல்வத்துடன் வாழ் வாழ்த்துவது ஆகும். தொல்காப்பியர் காலத்திலேயே தெய்வ வழிபாடு நடைபெற்றமையை அறிய முடிகின்றது.

வெறியாட்டு

தொல்காப்பியர் புறத்திணைகளைக் கூறும் பொழுது முதல் திணையான வெட்சித்திணையில் போருக்கு செல்ல குறிக்கேட்பதை காந்தள் என்கிறார். இத்துறையில் வேலன் காந்தன் பூச்சூடி ஆடிக் குறி கூறுவது வெறியாட்டு எனப்படுகிறது. இதனை,

"வெறிஅறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெளியாட்டு அயர்நத காந்தளும்" - (**தொல்**.1006)

என்ற நூட்பா விளக்குகிறது. களவு காலத்தில் தலைவியின் உடலில் மாறுபாடு ஏற்படும் போது தாயும், செவிலியும், கட்டுவிச்சி குறி கூறல் மூலமாகவும், கோடாங்கி

அருள் ஆடி குறி கூறல் மூலமாகவும், வெறியாட்டினை நிகழ்ச்சி தலைவியின் மாறுபாட்டிற்கான காரணத்தை அறிவதனை,

"கட்டினும் கழங்கினும் வெறி என இருவரும்" - (**தொல்.**1061)

தொல்காப்பியர் சுட்டியுள்ளார்.

தலைவி தலைவனுக்காக ஏங்கும் போது உடல் மெலிந்து பசலைப்படந்து கை வளையல்கள் கழன்றுவிழும் அதைக்கண்ட தாய் குறி கேட்பாள். இதனை,

"நல்லுதல் பரந்த பசலை கண்டு அன்னை
செம்முது பெண்டிரோடு நெல்முன் நிறீஇ
கட்டின் கேட்கும்" - (**நற்.**288)

என்ற அடிகள் விளக்குகின்றன. மேலும்,

"பொய்ய மரபின் ஊர் முதுவேலன்
கழங்கு மெய்ப் புடுத்து கன்னம் தூக்கி
முருகு என மொழியும்" - (**ஐங்.**245.3)

என்ற அடிகளில் வேலன் கடம்ப மலர் சூடி, கழற்காயை அணிந்து கொண்டு முருகனின் புகழினைத் துதித்து முருகன் தன் குறையைக் களைய வேண்டுமென்று வேண்டுகின்றான்.

".......முன்றில்
நனை முதிர் புன்கின் பூத்தாழ் வெண்மணல்
வேலன்புனைந்த வெறியயர் களந்தொறும்
செந்நெல் வான்பொரி சிதறி யன்ன" - (**குறுந்.**53)

என்ற அடிகளில் மணற்பரப்பில் புன்க மலர்கள் உதிர்ந்து கிடக்கின்றன. இதனை கண்ட கோப்பெருஞ் சோழனுக்கு முருகனை வழிபடும் வேலன் வெறியாடும் களம் நினைவிற்கு வருவதாகக் கூறப்பட்டுள்ளது. வெறியாட்டு தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் குறிகேட்டு வணங்குவதாக உள்ள முருக வழிபாடாகக் காணப்படுகிறது.

வெறியாடும் வேலனின் தோற்றம்

வேலன் மீது முருகன் தன் முழு ஆற்றலையும் செலுத்துகின்றான். அவ்வேலன் சிவந்த மேனியும் சிவந்த ஆடையும் அணிந்துள்ளான். அசோக மரத்தின் இளந்தளிரிலைகளைக் காதுகளில் அணிந்துள்ளான். இடையில் கச்சையும் தலையில்

வெட்சி மலர்களையும் சூடி இசைக்கருவிகளை இசைத்துக் கொண்டு ஆட்டை வாகனமாகக் கொண்டு வருவான். மயிலின் மேல் வருவான். கையில் சேவல் கொடியை கொண்டு வருவான். தோளில் தொடி அணிந்திருப்பான். இவ்வாறு முருகன் வேலனாக ஆடிவருவான் என்பதை,

"செய்யன், சிவந்த ஆடையன், செவ்வரைச்
செயலைத் தண்களிர் துயல்வரும் காதினன்
....
....
....
மென்தோள், பல்பிணை தழிஇ தலைத்தந்து
குன்றுதொறு ஆடலும்நின்ற தன்பண்பே..." - (முருகு.206-217)

என்ற அடிகள் விளக்குகின்றன.

விழா எடுத்து வழிபடல்

ஒவ்வொரு கடவுளுக்கும் வழிபடும் முறைகள் உள்ளது. அதேபோல் முருகனுக்கும் விழாக்கள் எடுத்துக் கொண்டாடும் முறை பழங்காலத்தில் காணப்பட்டது.

"சிறுதிணை மலரொடு விரைகி மறிஅறித்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊர்ஊர் கொண்ட சீர்கெழு விடிவினும்" - (முருகு.218-220)

என்ற அடியில் குன்றிலும் ஊரிலும் முருகனுக்குத் திருவிழா நடைபெறும் அவ்விழா மலர்களுடன் பிரப்பரசியை பரப்பி ஆட்டுக் குட்டியை அறுத்து அதையும் விரவு கோழிக்கொடியை நிறுத்தி விழா எடுத்து கொண்டாடியுள்ளனர்.

விழா எடுக்கும் இடங்கள்

குன்று உள்ள இடமெல்லாம் குமரன் இருக்கும் இடம் என்பர்.

"காடும் காவும், கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும், வேறுபல வைப்பும்
சதுக்கமும் சந்தியும், புதுப்புங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்" - (முருகு.223-225)

என்பதில் இருந்து காடுகளிலும், சோலைகளிலும், ஆற்று கிடைக் குறைகளிலும், குளங்களிலும், சதுக்கத்திலும், சந்தியிலும் கடம்ப மரத்திலும், கல்நிலையிலும் வழிபாடுகள் நடைபெறுகின்றன என்பதை அறியமுடிகின்றது.

வழிபடும் முறைகள்

முருகனை வழிபடும் முறைகள் இடத்திற்கு இடம் மாறுபட்டுக் காணப்படுகின்றது. குறமகள் தன் வழிபாட்டில் முதலில் சேவல் கொடி ஏற்றி, வாசலில் நெய்யும் வொன்சிறு கருகையும் அப்பி இருகை இணைத்து வழிபடுகிறாள். பின் மலர்தூவி, கையில் காப்புக்கட்டி பொரியைச் சிதறுகின்றாள். ஆட்டுகடாயின் இரத்தம் கலந்த அரிசையை வைக்கின்றாள். அரளி மாலையை தோரணமாகக் கட்டுகிறாள். ஊரை வாழ்த்தி பாடல் பாடுகிறாள். மனம் நிறைந்த புகையை எடுக்கின்றனர். பின்னர் குறிஞ்சிப்பண் பாடுகின்றனர். இசை கருவிகளை இசைக்கின்றனர். இரத்தத்தோடு கலந்த தினை அரிசியைப் பரப்பி வைத்துள்ளனர் என்பதை,

> **"மாண்தலைக் கொடியொடு மண்ணி அமைவர**
> ....
> ....
> **குருதிச் செந்தினைப் பரப்பி........"-** (முருகு227-242)

என்ற அடிகள் விளக்குகின்றன. மேலும் அவ்வாறு வணங்குவதால் "பொல் அரும் பரிசில் நல்குமதி" (முருகு.295) பெறுவதற்கு அரிய பரிசிலை கொடுப்பான் முருகன் என்பதில் முருகனை பல வழிகளில் வழிபட்டு வீடுபேற்றை அடைய விரும்புகின்றனர்.

முடிவுரை

தொல்காப்பியர் காலம் முதலே முருகவழிபாடு காணப்படுகின்றது. எட்டுதொகை நூல்களிலும் அகநூல்களில் தலைவியின் தனிமை நோய் தெரியாமல் தாய் முருகனின் வேலனின் வெறியாட்டு நடத்துகின்றாள். தொல்காப்பியரும் அகம், புறம் இரண்டிலும் வெறியாட்டுக் குறித்துப் பேசியுள்ளார். திருமுருகாற்றுப்படையிலும் வெறியாட்டு கூறப்பட்டுள்ளது. மேலும் முருகனை வேண்டி வழிபட்டு வீடுபேற்றை அடைகின்றனர்.

தொகுப்புரை

1. முருக வழிபாடு பழங்காலம் முதல் மக்களிடம் சிறப்பாக அமைந்துள்ளது.
2. காலம் காலமாக காணப்படும் முருக வழிபாட்டு முறையினை ஆராய இக்கட்டுரை தொடக்கமாக அமையலாம்.

துணைநூற்பட்டியல்

1. தமிழண்ணல் (உ.ஆ), தொல்காப்பியம், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை - 625001.
2. கா.சுப்பிரமணிய பிள்ளை (உ.ஆ), பழந்தமிழர் நாகரிகம், சாரதா பதிப்பகம், சென்னை - 14.
3. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை (உ.ஆ), நற்றிணை, தமிழ்மண் அறக்கட்டளை, சென்னை - 17.
4. சக்திதாசன் சுப்பிரமணியன் (உ.ஆ), குறுந்தொகை, தமிழ்மண் அறக்கட்டளை, சென்னை - 17.
5. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை (உ.ஆ), ஐங்குறுநூறு, தமிழ்மண் அறக்கட்டளை, சென்னை - 17.
6. ச.வே.சுப்பிரமணியன் (உ.ஆ), பத்துப்பாட்டு, மணிவாசகர் பதிப்பகம்.

REFERENCES

1. Tamilannal, Tholkapiyam, Menatchi Puthaga Niliyam, Madurai - 625001.
2. Ka.Subramiya Pillai, Palanthamilar Nagarikam, Saratha Pathipagam, Chennai - 14.
3. Ahwai Su.Duraisamypillai, Natrinai, Thamilman Arakatalai, Chennai - 17.
4. Sakthidasan Subramaniyan, Kurnthogai, Thamilman Arakatalai, Chennai - 17.
5. Ahwai Su.Duraisamypillai, Iynkurunuru, Thamilman Arakatalai, Chennai - 17.
6. Sa.Ve.Subramaniyan, Pathupattu, Manivasakar Pathipagam.